Tsi11T

**தென்காசி மாவட்டம்**

**முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024**

30-07-2024

**வகுப்பு 11**

நேரம் : 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 45

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **9×1=9**

1) "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) பாயிரம் இல்லது ................ அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

3) தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
ஆ) கடல் + அலை - உயிர் + மெய்
இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
ஈ) மண் + வளம் - மெய் + மெய்

4) 'வான் பொய்த்தது' - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

5) மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை அனைத்தும்

6) செங்கயல் - இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை

7) 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதியார் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதிதாசன்

8) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, விகுதி ஆ) பகுதி, விகுதி, சந்தி
இ) பகுதி, விகுதி, சாரியை ஈ) பகுதி, இடைநிலை, விகுதி

9) முல்லைத் திணையின் நிலம்
அ) மலை ஆ) கடல் இ) காடு ஈ) வயல்

## பகுதி - II

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக:** **4×2=8**

10) இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
11) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
12) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
13) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
14) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
15) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக:** **4×4=16**

16) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகின்றது?

17) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

18) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

19) மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது - என்பதை விளக்குக.

20) நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.
- இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.

21) 'என்னுயிர் தமிழ் என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

## பகுதி - IV

**ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×6=6**

22) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

23) திருமலை முருகன் பள்ளு கூறும் இயற்கை வளங்களை விவரிக்க.

24) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுது:** **4+2=6**

25) அ) 'ஏடு தொடக்கி' எனத் தொடங்கும் யுகத்தின் பாடல்.
ஆ) 'வடு' என முடியும் திருக்குறள்.

----------

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com